★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✠ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: கார்த்திகை 18உ திங்கள் (3—12—56) ★ ★ வெளியூர்: கார்த்திகை 19உ செவ்வாய் (4—12—56) [இதழ் 160

இரத்தக் கொதிப்பு நோய்க்கு அவரைக்காய் மருந்தாகும்!

மைசூர், டிச. 2—

அவரைக்காய், சிலருக்குத் தோன்றும் அமித இரத்தக் கொதிப்பைத் தணிக்கப் பயன்படும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இங்குள்ள உணவு ஆராய்ச்சிக் கழகத்தில் நடத்திய ஆராய்ச்சியின்போது இது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக மாநில முதன் மந்திரி நிஜலிங்கப்பாவிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

பண ஆசை காட்டும்

டெல்லியின் கீழ்த்தரமான போக்கு!

இந்தியைத் திணிக்க தீவிர முயற்சிகள்

நூற்றுக்கணக்கில் உபகாரச் சம்பளம் தர திட்டமாம்

இந்தியை எதிர்க்கும் தென்னாட்டவரை ஏமாற்ற இயலுமா?

இந்தியைப் பரப்புவது என்ற பெயரால், அரசியல் சட்டத்தின் நோக்கத்தையும் கட்டளையையும் மீறி டெல்லிப் பெரியவர்கள், நிர்வாகத்தின் பல துறைகளிலும் இந்தியைத் திணித்துவரும் போக்கினை நாடு நன்கறியும்.

இந்தியைத் திணிப்பதற்கு எத்தகு இழிசெயல்களையும் மேற்கொள்ள டெல்லிப் பெரியவர்கள் தயங்கமாட்டார்கள் என்பதும் தெளிவாகிவருகிறது.

இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களையும் இந்தி வழங்காத இதர மாநில மக்களையும், இந்தி கற்றுக்கொள்ளுமாறு தூண்டுவதற்கு மிகக் கீழ்த்தரமான—இலஞ்சம் கொடுப்பதுபோன்ற ஆசை காட்டும் மட்டரக முயற்சிகள் சிலவற்றில் இப்போது அந்தப் பெரியவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஐதராபாத், டிச. 1—

இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டிராத மக்கள் இந்தி படிப்பதற்கு ஊக்கமளிக்க டில்லி சர்க்கார் பல உபகாரச் சம்பளங்கள் வழங்கப் போகிறதாம்!

'மெட்ரிகுலேஷன், இண்டர், பி. ஏ.' போன்ற படிப்புகளில் இரண்டாவது இடம் பெற்றுத் தேறி, இந்தியில் 55 அல்லது அதற்கு அதிகமாக மார்க்குகள் பெறுபவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் வழங்கப்படுமாம்.

இந்தி வழங்காத பகுதிகளில் இண்டர்மீடியட் வகுப்பில் இந்தியை விருப்பப் பாடமாகக் கற்க விரும்புகிறவர்களுக்கு மாதம் ரூ. 50; பி. ஏ. படிப்பவர்களுக்கு மாதம் ரூ. 75; எம். ஏ. படிப்பவர்களுக்கு மாதம் ரூ. 100 வீதம் உபகாரச் சம்பளங்கள் வழங்கப்படுமாம்.

தாய் மொழி இந்தியாக இல்லாமலிருந்து, இந்தி வழங்கும் மாநிலங்களிலிருக்கும் மாணவர்களுக்கு மாத உபகாரச் சம்பளங்கள் அதிகமாகத் தரப்படுமாம்—(இண்டர்: ரூ. 80; பி. ஏ.: ரூ. 105; எம். ஏ.: 125) — என்று பெருந்தொகைகள் உபகாரச் சம்பளம் என்ற பெயரில் கொடுக்கப்படுமாம்!

இது, இந்தியைத் திணிக்க 'டில்லிப் பெரியவர்'கள் மேற்கொண்டிருக்கும் கீழ்த்தரமான ஆசை காட்டும் போக்கு என்பதைத் தவிர வேறென்ன?

தொல்லை தரும் குரங்குகளை ஒழிக்க!

மத நம்பிக்கை தடையாயிருக்கிறதாம்!

மக்களிடை நிலவிக்கொண்டிருக்கிற மத நம்பிக்கை காரணமாகக் குரங்குகளை ஒழித்துக்கட்டுவது என்ற திட்டத்தைக் கைவிட்டுவிட உத்தர பிரதேச விவசாய போர்டு முடிவு செய்திருக்கிறதாம்.

என்றாலும், குரங்குகளின் தொல்லையை ஒழிப்பதற்கு, அவற்றைக் கொல்வதைத் தவிர வேறு வழியில்லை என்றும் அந்த போர்டு ஒருமனதாக ஒப்புக்கொண்டிருக்கிறதாம்!

இன்னும் சில காலத்தில், பயிர்களை நாசம் செய்யும் இந்தக் குரங்குகளை ஒழிப்பதற்கு மக்கள் ஆதரவு கிடைக்கும் என்று 'போர்டு' நம்புகிறதாம்.

எவர் கண்ணில் மண்ணைத் தூவ?

பரோடா, டிச. 1—

இந்தியாவின் பல்வேறு பிராந்தியங்களிலும் உள்ள தொழில் வாய்ப்புகளையும் கனிப் பொருள் உற்பத்தியையும் ஆராய்ந்தறிந்து, மத்திய சர்க்காருக்கும் தொழிலதிபர்களுக்கும் அறிவிக்கும்பொருட்டு ஒவ்வொரு மாநிலத்திற்கும் நிபுணர்களை அனுப்புவதென டில்லி சர்க்கார் திட்டம் வகுத்திருக்கிறார்களாம்.

இந்தத் தகவலைத் தந்த கனரகத் தொழில் மந்திரி ஷா, தொழில்கள் பரவலாக அமைக்கப்பட வேண்டியதின் அவசியத்தையும் எல்லாப் பிரதேசங்களும் சமமாக அபிவிருத்தியடைய வேண்டியதின் அவசியத்தையும் வற்புறுத்தினாராம்.

152-வது பிணம்!

திருச்சி, டிச. 3—

அரியலூர் இரயில் விபத்தில் மரணமடைந்த மற்றொரு பெண்ணின் பிணம் மருதையாறு பாலத்திற்கு 2 பர்லாங்கு தூரத்தில் கிடைத்துள்ளதாம்.

இத்துடன் விபத்தில் இறந்தவர்களின் பிரேதங்களின் எண்ணிக்கை 152 என்று கூறப்படுகிறது.

செஞ்சீனப் பிரதமருக்கு ஆங்கிலத்தில் வரவேற்பு

பம்பாய் நகரசபை முடிவு

பம்பாய், நவ. 30—

இந்தியாவிற்கு வந்துள்ள சீனப் பிரதமருக்கு ஒரு வரவேற்பிதழ் அளிக்க பம்பாய் நகரசபை முடிவு செய்துள்ளது.

இந்திய நாட்டின் தேசிய மொழியாகிய இந்தியில்தான் அந்த வரவேற்பு இதழ் எழுதப்படவேண்டுமென உறுப்பினர்கள் பலர் நகரசபைக் கூட்டத்தில் வற்புறுத்தினர்.

ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட வரவேற்பு நகலை, குறுகிய காலத்தில் இந்தியில் மொழிபெயர்த்து வரவேற்பிதழ் தயாரிப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியமும் அல்ல—நடக்கக்கூடியதும் அல்ல என்று நகரசபைக் கமிஷனர் உறுப்பினர்களுக்குக் கூறியிருக்கிறார்.

அதன் பின்னர், ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட வரவேற்பு—இதழையே சீனப் பிரதமருக்கு அளிப்பதென முடிவு செய்யப்பட்டது.

கோயில்களைப் பராமரிக்க ரூ. 4½ இலட்சமாம்!

சென்னை சர்க்கார் திட்டம்

சென்னை, டிச. 1—

புதிய கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 400-க்கு மேற்பட்ட கோயில்களைப் பராமரிக்க சென்னை அறநிலையக் கமிஷனர் உத்தண்டராமபிள்ளையை உறுப்பினராகக்கொண்ட ஒரு உறுப்பினர் போர்டு நிறுவப்பட்டுள்ளதாம்.

1957 மார்ச் முடிய கன்னியாகுமரியிலுள்ள கோயில்களின் பராமரிப்புக்காக சென்னை சர்க்கார் ரூ 5,62,500 ஒதுக்கியுள்ளதாகத் தெரிகிறது.

12 கோடி வாக்குச் சீட்டுகள் அச்சடிப்பு!

உ. பி.-யில் தேர்தல் ஏற்பாடுகள் விரைவாக்கப்படுகிறது

இலட்சுமணபுரி, டிச. 2—

உத்திரப் பிரதேசத்தில், வரும் பொதுத் தேர்தலுக்காக சுமார் 12 கோடி வாக்குச் சீட்டுகள் அச்சடிக்கப்பட்டுவருவதாகத் தெரிகிறது.

5½ இலட்சம் வாக்குப் பதிவுப் பெட்டிகள் பழுதுபார்க்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளனவாம்!

45,000 வாக்குப் பதிவு செய்யும் சாவடிகள் நிறுவப்படும் என்றும், ஒரு இலட்சம் ஊழியர்கள் தேர்தலை நடத்தத் தேவைப்படுவர் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

★★

எல்லாம் ஒரே நாளில்!

★

தனித்தனியாகக் கண்டு ரசித்தீர்கள்!
எண்ணி எண்ணி மகிழ்ச்சி பெறுகிறீர்கள்!

டிசம்பர் 9!

உங்களுக்குக் கிடைப்பது புதியதோர் பொன்னான வாய்ப்பு!

★

கள்ள ரத்தினமாக — புதுமைப் பித்தனாக

கே. ஆர். இராமசாமி — எஸ். எஸ். இராசேந்திரன்

எம். ஜி. இராமச்சந்திரன்

புதிய நாடகக் காட்சி தருகிறார்

சுமைதாங்கி!

★

கலைஞர் கூட்டணி காண்கிறீர்! கழக முயற்சிக்கு உதவுகிறீர்!
தேர்தல் வெற்றிக்கு வழிதேடித் தருகிறீர்!!

இத்தனையும் அளித்திடும் நாள்

டிசம்பர் 9 — எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

★

திரண்டு வாரீர்! மாற்றுக் கட்சிகள்—நாட்டைப் பிடித்தாட்டும் சர்க்கார் உணர வேண்டும்—

தி. மு. கழக வலிவும் பொலிவும்!

வெற்றிக்கு வழிகாண டிசம்பர் 9!

—தலைமைக் கழகம் (தி. மு. க)

★★

நம் நாடு

சென்னை 3—12—'56 திங்கள்

கோலார் தங்கச் சுரங்கம்

கோலார் தங்கச் சுரங்கம் மைசூர் மக்களின் பொதுச் சொத்தாக்கப்பட்டு விட்டது. இதுமுதல், அச்சுரங்கத்தின் மூலம் கிடைத்துவரக்கூடிய பெரும் இலாபத்தை மைசூர் மக்களின் பொதுநலனுக்குப் பயன்படுத்தப்பட்டுவரும்.

ஏற்கனவே அந்தச் சுரங்கத்தில் கிடைத்துவந்த செல்வம் அனைத்தையும் ஜான் டெய்லர் எனும் ஆங்கிலேயக் கம்பெனி அனுபவித்துவந்தது. அந்தச் சுரண்டல் ஏற்பாட்டிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது.

முதல் முதலாகக் கோலார் தங்கச் சுரங்கத்தை மேற்கொள்ள வேண்டும் என மைசூர் அரசாங்கம் முன்வந்தபொழுது, இப்பொழுது கொடுத்துள்ள நஷ்டஈட்டுத் தொகையைவிட சரிபகுதிக்கும் குறைவான தொகையையே கொடுக்கமுடியும் என அறிவித்தது. அத்தொகை மிகமிகக் குறைவு எனக் காரணங்காட்டி ஆங்கிலக் கம்பெனி அங்கலாய்க்க முன்வந்தது.

பொதுவாகவே, ஆங்கில மூலதனத்தை நாட்டு உடைமையாக்கும் கருத்தை உடன்பாடாகக் கொள்ளாத பிரிட்டனும் உலக வங்கியும், மைசூர் அரசாங்கம் கொடுக்க முன்வந்த நஷ்டஈட்டுத் தொகையைச் சுட்டிக்காட்டி, நாட்டு உடைமையாக்கும் கருத்தை எதிர்க்கத் தொடங்கின. அதை நியாயமானது என்று ஆங்கில நிறுவனங்களை நாட்டு உடைமையாக்குவதில் முழு ஆசை கொண்டில்லாத இந்தியப் பேரரசும், மேற்குறிப்பிட்ட எதிர்ப்பை ஒரு புகலாகக் கொண்டு, மைசூர் அரசாங்க விருப்பத்திற்கு இணங்க முதற்கண் மறுத்தது.

இந்தியப் பேரரசின் நிலை கண்டு அதிர்ச்சி அடைந்த, அப்பொழுது முதலமைச்சராக இருந்துவந்த அனுமந்தையா அவர்கள், கோலார் தங்கச் சுரங்கத்தை நாட்டு உடைமையாக்குவதில் இந்தியப் பேரரசு கொண்டிருந்த மனப்போக்கை வெளிப்படையாகத் தாக்கிப் பேசினார். 'நான் முதலமைச்சர் பதவியையே இழக்க வேண்டி ஏற்பட்டாலும் இந்தியப் பேரரசின் மனப்போக்கை எதிர்த்து, கோலார் தங்கச் சுரங்கத்தை நாட்டு உடைமையாக்குவதில் வெற்றி பெற்றே தீருவேன்' என்று மைசூர் சட்டசபையில் பெருமுழக்கமிட்டார்.

அனுமந்தையா அவர்கள் காட்டிய உறுதிப்பாடு வீண் போகவில்லை. அந்த உறுதிப்பாடு, அவருடைய அமைச்சர் பதவிக்கு மெள்ள மெள்ள உலை வைத்துவிட்ட போதிலும், தங்கச் சுரங்கத்தை மைசூர் மக்களுடைமையாக்கும் தமது கருத்துக்கு இணக்கங் காட்ட மறுத்த இந்தியப் பேரரசையும் இறுதியாக இணங்கச் செய்வதில் முழுவெற்றி பெற்றுவிட்டிருக்கிறது.

தங்கச் சுரங்கம் நாட்டு உடைமையாக்கப்பட்டிருப்பது மைசூர் மக்களின் வெற்றியாகக் கொள்ளப்பட வேண்டியதே முறையாகும் என்றாலும், முட்டுக்கட்டை போட்டுவந்த இந்தியப் பேரரசை முடிவாக இணங்கி வருவதற்குப் பெருமுயற்சி செய்த அனுமந்தையா அவர்களும் மைசூர் மக்களின் பாராட்டுதலுக்கு நூற்றுக்கு நூறு உரியவராவார். அரசியல் காரணங்களுக்காக இம்மகத்தான உண்மை இப்பொழுது மறைக்கப்பட்டுக் கிடந்தபோதிலும், என்றைக்காவது ஒருநாள் அது மக்கள்முன் காட்சி அளித்தே தீரும் என்பதில் ஐயமில்லை.

தங்கச் சுரங்கத்தில் இப்பொழுது ஏறத்தாழ இருபத்தினாயிரம் தொழிலாளர்கள் வேலை செய்துவருகின்றனர். நாட்டு உடைமையாக்கப்பட்ட தங்கச் சுரங்கம் செவ்வனே செயல்படுவதற்கு தொழிலாளர்கள் வழக்கம்போல் ஒத்துழைக்க வேண்டும் என இன்றைய மைசூர் முதலமைச்சர் வேண்டிக்கொண்டுள்ளார்.

ஒத்துழைக்க வேண்டும் எனத் தொழிலாளர்களை மனமுருக வேண்டிக்கொள்ளுவதுடன் முதலமைச்சர் இருந்துவிடக்கூடாது. ஏறிவரும் அகவிலைகளுக்கு ஒப்ப, அவர்களுடைய கூலியும் ஒத்திருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டும். அந்தக் கடமையை முதலமைச்சர் எந்த அளவு நிறைவேற்றி வைக்கத் தயாராக இருக்கிறாரோ, அதைப் பொறுத்துத்தான் அந்தத் தொழிலாளர்கள் முதலமைச்சர் வேண்டுகோளுக்கு மதிப்பளித்து நிறைவேற்றி வைப்பதும் இருக்கிறது.

நயமான சொல்லும், நிறைவேற்ற எண்ணாத தாராள வாக்குறுதிகளும், கேட்பதற்குக் கவர்ச்சி நிரம்பியதாகத்தான் இருக்கும். ஆனால் அவை அனைத்தும், தொழிலாளர்களின் பசித்த வயிற்றை நிரப்புவதற்கும், மற்ற தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் கடுகளவும் பயன்படாது.

கோலார் தங்கவயல் போன்று ஆழமான சுரங்கம் உலகில் வேறு எங்குமே இன்று இருக்கவில்லை. பூமி மட்டத்திற்கு அடியில் 9,950 அடி ஆழங்கொண்டது கோலார் தங்கச் சுரங்கமாகும்.

ஆயிரக்கணக்கான அடி ஆழத்தில் இறங்கி, மண்ணைக் குடைந்து தங்கத்தைத் தரை மட்டத்திற்குமேல் கொண்டு வருவது என்பது, முதலமைச்சர் பதவியில் வீற்றிருப்பது போன்றதல்ல. அது, கண் மூடித் திறப்பதற்குள் விமானம் மூலம், சுகமாக டெல்லி சென்றுவிட்டுத் திரும்பும் உல்லாசப் பிரயாணம் போன்றதுமல்ல.

நன்மக்களையும், அன்புக்குரிய இல்லாளையும், மூப்படைந்த பெற்றோர்களையும், உற்றார் உறவினர்களையும், எல்லாவற்றிற்கும் மேலாக சொந்த உயிரையும் பணயம் வைத்துவிட்டு ஆயிரம் ஆயிரமடிக் குழிக்குள் இறங்க வேண்டும். குழிக்குள் மண் சரிந்தால், கற்பாறை இடம் பெயர்ந்தால், மண்ணும் குருதியும் கலந்த மனிதக் குழம்பாகத்தான், இறங்கின தொழிலாளர்களின் உடல்கள் கரைவந்து சேரும்.

கோலார் தங்கச் சுரங்கத்தில் பணியாற்றும் தொழிலாளி ஒருவரேனும் குறையுடையவர்களாக இனி இருக்கக் கூடாது. அந்தவகையில் தொழிலாளர்களைத் திருப்தியுடையவர்களாக வைத்துக்கொள்வதின் மூலம்தான், நாட்டு உடைமையாக்கப்பட்ட கோலார் தங்கச் சுரங்கத்தின் முழு பலனை மைசூர் மக்கள் அனுபவிக்கச் செய்வது சாத்தியமாகக்கூடும்.

அமெரிக்க நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள்

எண்ணிக்கை பற்றித் தகவல்

புதுடில்லி, நவ. 30—

அமெரிக்காவில் 500 இந்தியர்களும் கனடாவில் 4,000 பேர்களும் குடியிருப்பதாக மக்கள்சபையில் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்கப் பட்டியலிலிருந்து தெரியவருகிறது.

மற்றும், அமெரிக்காவைச் சேர்ந்த மற்ற நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் எண்ணிக்கை மதிப்பீடும் தரப்பட்டுள்ளது:—

அர்ஜென்டைனா—125; பிரேசில்—60; பிரிட்டிஷ் கயானா—2,00,000; கொலம்பியாவில்; டச்சு கயானா—70,000; ஈக்குவிடார்—1; பனாமா—300; பெரு—3; வெனிசுலா—7.

2-இலட்சம் வாலிபர்கள்

'வியாதி'க்கு இரையாவர்?

நியூயார்க், நவ. 28—

அமெரிக்காவில் சித்தப்பிரமைகளின் விளைவாக பீடிக்கப்பட்டுள்ள நோயாளிகள் பாதிப்பேர் 11 வயதிலிருந்து 19 வயதிற்கு உட்பட்டவர்களாம்.

இந்த ஆண்டு குறைந்தது 2—இலட்சம் பேர் இந்த வியாதிக்கு இரையாகக்கூடும் என்று அஞ்சப்படுகிறதாம்.

கிரந்தி போன்ற பயங்கர வியாதிகள் இளம் பெண்களிடையே பரவி வருவதுபற்றி அமெரிக்க சமூக சுகாதாரக் குழுத் தலைவர் கவலை தெரிவித்துள்ளார்.

10,331 பாகிஸ்தானிகள்

அனுமதியின்றி இந்தியாவுக்குள் நுழைந்தனராம்

1956 ஜூலை 1-ந் தேதியிலிருந்து அக்டோபர் 31-ந் தேதி வரையில், பாகிஸ்தானிலிருந்து மொத்தம் 10,331 பேர், பிரயாண அனுமதியின்றி ஆந்திர மாநிலம் நீங்கலாக இந்தியாவின் பிற மாநிலங்களுக்குள் சட்ட விரோதமாக நுழைந்திருப்பதாகவும், இதுவரையில் 7,498 பேர் தண்டிக்கப்பட்டுள்ளனரென்றும் 20 பேர் அவர்களுடைய சிறைத் தண்டனைக் காலம் முடிவடைந்தபிறகு மீண்டும் பாகிஸ்தானுக்குப் போக மறுத்துவிட்டனர் என்றும் மக்கள் சபையில் உள்விவகார அமைச்சர் கூறியுள்ளார்.

விமான விபத்துக்களில் 135 பேர் பலியாம்!

பம்பாய், நவ. 29—

கடந்த பத்து நாட்களில் உலகத்தின் பல பாகங்களில் ஐந்து பெரிய விமான விபத்துக்கள் நேர்ந்துள்ளன. அவ்விபத்துக்களில் மொத்தம் 135 பேர் இறந்துள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது.

84,343 பேர் வேலையற்று இருக்கின்றனராம்!

இலங்கையில் 1956 செப்டம்பர் இறுதிவரையில் வேலையில்லாமலிருப்பவர்களின் தொகை 84,343 என அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழிற்பயிற்சி பெறும் மாணவர்கள்

தாங்களே தொழில் நடத்த சர்க்கார் கடன் உதவி

சென்னை, நவ. 30—

தொழிற்பள்ளிகளில் பயிற்சி பெறும் மாணவர்களில் அரசாங்க உதவி பெறத் தகுதிவாய்ந்த வகுப்பினர்களுக்கு, பயிற்சிக்குப் பிறகு அவர்களே தொழிலை நடத்த வசதியளிக்கும் நோக்கத்தில், குறைந்தது 100 பேருக்காவது கடன் உதவி செய்வதற்காக நடைமுறை ஆண்டில் ரூ. 50,000 அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

தொழிற் கருவிகளும், மூலப் பொருள்களும் வாங்குவதற்காக இந்தக் கடன் கொடுக்கப்படுகிறது. எனவே கடன்தொகை தொழிலுக்கேற்ப வேறுபடலாம்.

ரூ. 200 கோடி கடன்

உலக பாங்கியிடம் இந்தியா கேட்குமா?

புதுடில்லி, நவ. 30—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், இந்திய இரயில்வேக்களின் அபிவிருத்திக்காகவும், நீர்ப்பாசன—விசை அபிவிருத்திக்காகவும் மொத்தம் 40 கோடி டாலர் (சுமார் ரூ. 200 கோடி) கடன் பெற உலக பாங்கியுடன் இந்திய சர்க்கார் பேச்சுவார்த்தை நடத்துவார்களாம்.

ரூ. 60 கோடி ரஷ்யா கடன் தருமாம்

புதுடில்லி, நவ. 30—

இந்தியாவுக்கு ரூ. 60 கோடி கடன் உதவியளிப்பதற்கு ரஷ்யா முன்வந்துள்ளது; இதை எப்படிப் பயன்படுத்திக் கொள்வது என்று இந்திய அரசாங்கம் யோசித்து வருகிறதாம்.

இந்திய இரயில்வேக்குத் தேவையான விசேட ரக உருக்கை ரஷ்யாவிடமிருந்தே வாங்குவதற்கு அக்கடனில் ஒரு பகுதியை (ரூ. 20 கோடி முதல் ரூ. 30 வரை) பயன்படுத்திக் கொள்ளலாமென யோசனை ஒன்று கூறப்பட்டுள்ளதாம்.

நாடோடிகளிடம் உள்ள கால்நடைச் செல்வம்

புதுடில்லி, நவ. 30—

இரண்டு இலட்சம் நாடோடி குடும்பங்களிடம் 1 கோடி கால்நடைகள் இருப்பதாகவும், ஆண்டுதோறும் 20 இலட்சம் மணங்கு நல்ல நெய் அவர்களிடமிருந்து கிடைப்பதாகவும், அம்மக்களுக்குப் புதிய வாழ்வு அளிப்பதற்கு அரசாங்கம் திட்டமொன்று தயாரிப்பதாகவும் தெரிகிறது.

ஆட்சியின் திறமை அம்பலமாகிறது

1950—51 முதல் 1954—55 வரையிலும் மொத்தம் ரூ. 182·80 கோடி வருமான வரி பாக்கியிருந்ததாம்; அதில் ரூ. 23·9 கோடி, வசூலிக்க முடியாத தொகையாகக் கருதப்பட்டுவிட்டதாம்.

இந்தத் தகவலை மக்கள்சபையில் ரெவின்யூ அமைச்சர் கூறியுள்ளார்

நெல்லை மாவட்டத்தில் கைத்தொழில் நிலையம்

இந்தியப் பேரரசு தரும் மானிய உதவியின் தாராளம்

சென்னை, நவ. 30—

பிரம்பு, மூங்கில் இவற்றுடன் பனை நார்களைக்கொண்டு கட்டில்கள், மற்றும் தட்டுமுட்டுச் சாமான்களைச் செய்யும் நிலையமொன்றை திருநெல்வேலி மாவட்டம் நாசரத்தில் நிறுவ அரசாங்கம் அனுமதித்திருக்கிறது.

பனைமரச் செல்வத்தை எவ்வளவுக்குப் பயன்படுத்தலாமென்பதை அளவிடுவதும் அதே நேரத்தில் அத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு முழுநேர வேலை கொடுப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் மூலதனச் செலவு ரூ. 9,500. ஆண்டுதோறும் ஏற்படும் செலவு ரூ 51,456. இந்தியப் பேரரசு இத்திட்டத்திற்கு மானியமாக ரூ. 8,228-ம் கடனாக ரூ. 25,000-மும் அனுமதித்திருக்கிறது.

மக்களின் ஒத்துழைப்பு இல்லையென ஓலம்?

'யுரேனியம்' கண்டுபிடிக்கும் முயற்சியில் அரசாங்கத்தின் நிலை

யுரேனியம் நமது நாட்டில் எங்கெங்கு காணப்பெறுகின்றது என்று தேடிக் கண்டுபிடிக்கும் நோக்கத்துடன் அரசாங்கம் எடுத்த முயற்சிக்குப் பொதுமக்கள் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஆதரவு தரவில்லையென்று மக்கள் சபையில், இந்திய வெளிநாட்டமைச்சர் துறைப் பாராளுமன்றச் செயலாளர் அறிவித்துள்ளார்.

('யுரேனியம்' அணுசக்தி உற்பத்திக்கு மிக முக்கியமான மூலப் பொருள் என்பது குறிப்பிடத்தக்கது.)

தற்போது திரு-கொச்சியில் மட்டுமே உயர்ந்த ரக 'யுரேனியம்' கிடைக்கிறது; வேறு எங்கேனும் அது மறைந்திருக்கிறதா என்பதைக் கண்டறியவே அரசாங்கம் முயர்சித்து வருகிறதாம்.

பனை ஓலைப் பொருள்கள் பயிற்சி நிலையங்கள்

சேலம், திருச்சி மாவட்டங்களில் ஏற்படுத்தத் திட்டம்

சென்னை, நவ 30—

பனை, தென்னை ஓலையினால் பல பொருள்கள் செய்யும் தொழிலை நிலைப்படுத்தவும் அப்பொருள்களை ஏராளமாக வெளிநாடுகளுக்கு அனுப்பவும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது.

அதன்படி சேலம் மாவட்டத்தில் மாத்தூரிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பள்ளப்பட்டியிலும் பயிற்சி-சேவா நிலையங்கள் நிறுவப்படும். 'ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு நிலையத்தில் 20 பேருக்குப் பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்திற்கு ஆரம்ப மூலதனமாக ரூ. 2,500-ம், பிறகு ஆண்டுதோறும் ரூ 31,800-ம் செலவாகும். இந்தியப் பேரரசு இதற்கு மானியமாக ரூ. 25,120-ம்—கடனாக ரூ. 2,500-ம் கொடுக்கும்.

தோல்வியை மறைத்துக்கொள்ள இந்தச் சூழ்ச்சியா?

நகரசபைக் கூட்டத்திலிருந்து காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளியேறினர்

ஜபல்பூர், நவ. 30—

கடந்தவார இறுதியில், ஜபல்பூர் நகராட்சி மன்றக் கூட்டத்தில், ஆட்சி மன்ற இலாகாக்களின் மானியக் குழுக்களுக்கான தேர்தல் நடைபெற்றபோது, அதனை காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆட்சேபித்திருக்கின்றனர்.

காங்கிரஸ் உறுப்பினர்களின் இந்த ஆட்சேபணையை மேயர் மறுத்துவிடவே அவர்களனைவரும் கூட்டத்தைவிட்டு வெளிநடப்புச் செய்திருக்கின்றனர்.

காங்கிரசார் வெளியேறின பின்னர் நடைபெற்ற அத்தேர்தலில் ஆறு துணைக் குழுக்களின் இடங்களையும் பி. சோ. கட்சினர் கைப்பற்றிக் கொண்டனர் என்று தெரிகிறது.

'அங்கே பாதாள இரயில்வே திட்டம்; இங்கே பாலங்களைப் பழுது பார்க்கவும் நாதியில்லை'

'இதற்குப் பெயர்தான் சுதந்திர ஜனநாயக ஆட்சியா?'

'திராவிடத்திற்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகள் மன்னிக்க முடியாதவைகளாகும்'

காமராசர்கள் சிந்திக்கும் ஆற்றலையும் இழந்து விட்டனர்

அறந்தாங்கியில் துணைப் பொதுச்செயலாளர்

என். வி. நடராசன் கருத்துரை

"காங்கிரஸ் கட்சியினர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு ஒன்பது ஆண்டுகள் ஆகின்றன. இந்த ஒன்பது ஆண்டுகளில், 'சுயராஜ்யம்' 'குடி அரசு' என்ற வார்த்தைகளின் 'அளவில்' மாற்றங்கள் ஏற்பட்டு வந்திருக்கின்றனவேயல்லாது மக்களின் வாழ்வில் எவ்வித மாறுதலும் அல்லது நன்மையும் பயக்கவில்லையென்பதை அரசியல் விபரம் அறிந்தவர்கள் அனைவரும் மனதார ஒப்புக்கொள்வர். அதிலும் குறிப்பாக நம் தாயகத்திற்கு—திராவிடத்திற்கு இந்தக் காங்கிரஸ் ஆட்சியில் ஏற்பட்டுள்ள கொடுமைகளும், விளைவிக்கப்பட்டுவரும் அநீதிகளும், என்றும் மறக்கமுடியாதவைகள்—ஏன்? மன்னிக்க முடியாதவைகளுமாகும்.

"இந்த விவரங்களையெல்லாம் அவ்வப்போது திராவிட முன்னேற்றக் கழகம் தக்க சான்றுகளுடன் எடுத்துக் காட்டிக் கண்டித்தும், அவ்வித அநீதிகள் ஒழிந்து, நம் நாடும் நம் மக்களும் நல்வாழ்வுபெற வேண்டுமானால், நம் நாடு தனி உரிமை பெற்று அதற்கான ஆட்சி முறையுடன் இயங்குதல் வேண்டுமென்பதையும் திட்டவட்டமாகக் கூறிவந்திருக்கிறது

"ஆனால் இந்த இன்றியமையாத உரிமையை நாம் கேட்கும்போது, 'திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பிரிவினை மனப்பான்மை கொண்டவர்கள்—இந்திய ஒற்றுமைக்குக் கேடு பயப்பவர்கள்' என்று அர்த்தமில்லாமல் கூப்பாடு போடத்தான் நம் மாநிலத்தின் அமைச்சர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் பழகிக் கொண்டிருப்பதோடு, கடந்த ஒன்பது ஆண்டுகளாக ஒவ்வொரு துறையிலும் தமிழ்நாடு எவ்வளவு கேவலமாகப் புறக்கணிக்கப்பட்டு வருகிறது என்று சிந்திக்கும் ஆற்றலையும் அடியோடு இழந்துவிட்டனர்.

"இந்தக் கீழான நிலையில் சென்று நம் நாட்டின் வாழ்வைச் சீர்குலையச் செய்துவரும் காங்கிரஸ்காரர்கள்கூடத் தெளிவு பெறும் அளவுக்கும், திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கும் தனி உரிமை மிக இன்றியமையாதது என்பதை அவர்கள் புரிந்துகொள்ளும் அளவுக்கும் அண்மையில், அரியலூர் அருகே ஏற்பட்ட இரயில்வே விபத்தின் கொடுமை வளர்ந்துகொண்டே போகிறது."

—இவ்வாறு துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், 26—11—56 மாலை அறந்தாங்கியில் நடைபெற்றத் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசியதாவது :—

"சில மாதங்களுக்குமுன் ஐதராபாத்தில் ஏற்பட்ட இரயில் பாலம் விபத்தில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் பரிதாபகரமான முடிவுக்குஆளானார்கள். அந்தச் சமயத்திலேயே இரயில்வே பாலங்கள் அனைத்தும் சீர்செய்யப்பட வேண்டும் என்று எச்சரிக்கப்பட்டிருக்கிறது. மாதங்கள் இரண்டாகியும், மழைகாலம் வரப்போகிறது என்று தெரிந்திருந்தும் கூடத் தென்னாட்டில் உள்ள இரயில்வே பாலங்களைக் கூடுமானவரையிலாகிலும் சீர்ப்படுத்த வேண்டும என்ற பொறுப்போ அக்கரையோ, நேரு சர்க்காருக்கும் இரயில்வே இலாகாவினருக்கும் இருந்ததாகக் காணோம். ஆனால் அதே சமயத்தில் பம்பாய்ப் பகுதியில் பாதாள இரயில்வே அமைக்க ஏற்பாடாகி வருவதாகச் செய்திகள் தரப்படுகின்றன. நம் நாட்டிலுள்ள காமராசர்களுக்கோ இரயில்வே நிர்வாகப் பொறுப்பு கிடையாது. இரயில் நிர்வாகம் மட்டுமல்ல—அது போன்ற முக்கிய நிர்வாகங்கள் அனைத்துமே மத்திய சர்க்காருக்குத்தான். ஆனால் அந்த மத்திய சர்க்காருக்கோ, தென்னாட்டைப் பற்றிய எந்தத் துறையிலும் அக்கரையிருப்பதில்லை. இதற்குப் பெயர்தான் 'ஏக இந்தியா' ஆட்சியாம்!—'சுதந்திர ஜனநாயக' ஆட்சியாம்!

"இந்த ஆட்சி முறையையும் ஆள்வோரின் போக்கையும் குறை கூறுபவர்கள், பிரிவினை மனப்பான்மையுள்ள கெடுமதியாளர்கள் என்றெல்லாம் இழித்தும் பழித்தும் பேசுகின்றனர், உரிமையைப் பறிகொடுத்து விழிக்கும் நம் நாட்டிலுள்ள காங்கிரஸ்காரர்களும் சர்க்காரும்!

"*இந்தியத் துணைக் கண்டத்திலேயே இரயில்வே பிரயாணிகள் வண்டி மூலமாக அதிகமான வருமானத்தைத் தேடித் தருவது தென்னாடேயாகும். இதனை இரயில்வே இலாகாவின் வரவு-செலவுகளே நன்கு விளக்கும். அவ்வாறிருந்தும், தென்னாட்டு மக்கள் அடிக்கடி இரயில் விபத்துக்களினால் கோரமான முடிவை அடைய வேண்டியிருக்கிறதென்றால், இந்த ஆட்சிமுறை எவ்வளவு அலட்சியப் புத்தியும் இறுமாப்பும், அநீதியும் கொண்டிருக்கிறது என்பதை சிந்தித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

"*ஜன நெருக்கடியின் காரணமாகப் பிரயாணிகளுக்குத் தொல்லை ஏற்படுகின்றது என்பதையறிந்து மேலும் இரயில்கள் விடவேண்டும் என்று நம சட்டசபையே ஒருமனதாக முடிவு செய்தாலும்கூட, அதை நிறைவேற்றும் பொறுப்பு அதற்கில்லை; அதற்கு அந்த உரிமையும் கிடையாது. ஆனால் அந்த உரிமைகளையெல்லாம் கையில் வைத்துக்கொண்டிருக்கிற நேரு சர்க்காரோ நம் மாநில ஆக்கப் பிரச்சினையில் சாதாரண மனிதாபிமானம்கூடயில்லாது கடந்த 9 ஆண்டுக்காலமாக தர்பார் நடத்தி வருகிறது.*

"*இவ்வளவிற்குப் பிறகும்கூட நாம் தனி உரிமை கோருவது தீது பயக்கும்—இந்திய ஒற்றுமையைச் சீர்குலைத்துவிடும் என்று நம் நாட்டிலுள்ள காங்கிரஸ்காரர்களும் காமராசர்களும் கூப்பாடு போடுகிறார்களென்றால், இவர்களைப் போன்றவர்கள் தாயகத்தைக் காட்டிக்கொடுத்துப் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கும் துரோகிகள் என்பதைச் சுட்டிக்காட்டி மக்கள் மன்றம் குற்றஞ்சாட்டி வருவதில் தவறிருக்க முடியுமா என்று கேட்கிறேன்.*

"அரியலூர் இரயில் விபத்தின் விவரங்கள் தினந்தோறும் நம்மை நடுங்கவைக்கின்றன; கண்கலங்கச் செய்கின்றன. தென்னாட்டு சரித்திரத்திலேயே இதுவரை இவ்வித கோரமான இரயில் விபத்து ஏற்பட்டதில்லையென்று அனைவரும் மனம்குமுறிக் கூறுகின்றனர்.

"திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் அம்பில் தருமலிங்கம் அவர்களும், மற்றத் தோழர்களும் அவ்விடம் சென்று கூடுமானவரை உதவிகளைச் செய்திருக்கின்றனர். நாமெல்லாம் செய்யக்கூடியவை அவ்வளவுதான். ஆனால் ஆட்சிபீடத்தில் அமர்ந்துள்ள காமராசர்களுக்கு, இவ்விதக் கோரப் பலிக்கு மக்களை இரையாகாமல் தடுக்கவும் நம் தாயகத்தைச் சுதந்திர பூமியாக்கவும் தன்மானம் சிறிதும் இல்லை.

"*நடந்த ஒன்பது ஆண்டுகளாக 'ஏக இந்தியா' ஆட்சியில் நடைபெற்றுவரும் அநீதிகளின்—ஓரவஞ்சனைகளின் உச்ச நிலையை அரியலூர் இரயில் விபத்து எட்டிப் பிடித்துவிட்டது.*

"*எனவே, இதுபோன்ற அக்கிரமங்களைத் தகர்த்தெறிந்து நல்லாட்சியை நிறுவ, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை, கோட்பாடுகளுக்கும், அவைகள் வெற்றிபுற தி. மு. கழகம் மேற்கொண்டுள்ள நற்பணிகளுக்கும் நீங்களெல்லாம் மேலும் மேலும் ஆதரவு தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.*"

நிகழ்ச்சிகள் :

26-11-56 *மாலை* 7 *மணிக்கு அறந்தாங்கி தி. மு. கழகச் சார்பில் வ. உ. சி திடலில் தோழர் ஜி எஸ் மணி தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.*

தோழர் மு க. மீரா அவர்கள் துவக்கத்தில் சிறிது நேரம், காங்கிரஸ் ஆட்சியில் தொடர்ச்சியாகத் தென்னக மக்களுக்கு இழைக்கப்பட்டுவரும் அநீதிகளைச் சுட்டிக் காட்டிப்பேசினர்.

இறுதியில் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் காங்கிரஸ் சர்க்காரின் ஓரவஞ்சனைகளைச் சுட்டிக் காட்டியும், தேர்தலில் தி. மு. கழகத்திற்குப் பொதுமக்கள் ஆதரவு தருமாறு கேட்டுக்கொண்டும், அரியலூர் இரயில் விபத்துக் குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

தலைவர் முடிவுரைக்குப்பின் செயலாளர் மாரிமுத்து நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

கூட்டத்தில் அரியலூர் இரயில் விபத்தில் சிக்கி உயிரிழந்தோர் குடும்பத்தவருக்கும் படுகாயமுற்றோருக்கும் அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கட்டுமாவடியில் :

27—11—56 *பகல்* 1 *மணிக்கு, அரியலூர் அடுத்த கட்டுமாவடியில்*

மறைந்த மாவீரன் பெயரால் நினைவு மன்றங்கள்

மறைந்த மாவீரன் கே. வி. கே. சாமியின் நினைவாக நாட்டின் பலவிடங்களில் மன்றங்கள், படிப்பகங்கள், சொற்பயிற்சி மன்றங்கள் போன்ற அமைப்புகள் நிறுவப்பட்டு அனுதாபத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஏற்கனவே வெளியிடப்பட்டவை நீங்கலாக, எஞ்சியவை இங்கு சுருக்கமாக வெளியிடப்பட்டுள்ளன :—

திண்டுக்கல் :

25—11—56 *காலை* 10 *மணிக்கு சாலைஹால் ரோடில் கே. வி. கே. சாமி நினைவுப் படிப்பகத் திறப்பு விழா தோழர் பி. வி. இராசாராம் தலைமையில் நடைபெற்றது தோழர் என். முத்து கழகக்கொடி ஏற்றினார்; தோழர் பி. சமதர்மம் சாமி படத்தைத் திறந்து வைத்தார். தோழர் கே. எஸ். சந்தானம் படிப்பகத்தைத் திறந்து வைத்தார். அன்று மாலை சோலைஹால் திடலில் தோழர் கே. எஸ். செல்லையா தலைமையில் நடைபெற்றப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் எஸ் முத்து, பி. சமதர்மம், எ. சுப்பையா ஆகியோர் பேசினர். அரியலூர் புகைவண்டி விபத்தில் உயிரிழந்தவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது அன்று இரவு* 10 *மணிக்கு படிப்பக நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது :—செயலாளர் : கே. எஸ். செல்லையா; துணைச் செயலாளர் : பி. வி. இராசாராம்; பொருளாளர் : மு. த. நாராயணன்* 10 *செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.*

இராசபாளையம் :

30—9—56*ல் இராசபாளையம் தி. மு. கழக அலுவலகத்தில் தோழர் சு பாலகிருட்டிணன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் கே. வி. கே. சாமி நினைவு சொற்பயிற்சி மன்றம் அமைக்கப்பட்டு தோழர்கள் டி கே. கே. சாமி, க. பழனிச்சாமி, பெ. சங்கரையா ஆகியோர் முறையே செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.*

வேலூர் :

14—10—56*ல் வேலூர் குழந்தைகள் பூங்காவில் நடைபெற்ற கே. வி. கே. சாமி மன்றச் செயற்குழுக் கூட்டத்தில் விருதை சங்கரலிங்கம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது மற்றும் சில முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.*

தி. மு. கழகச் சார்பில் துணைப் பொதுச்செயலாளர் என். வி நடராசன் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. கழகத் தோழர்களுக்குத் துணைப் பொதுச்செயலாளர் நன்றி தெரிவித்துக் கொண்டு, கழகப் பணியில் மேலும் ஆர்வம் காட்டுமாறும் கேட்டுக் கொண்டார்.

மணமேல்குடியில் :

28—11—56 *மாலை* 6-15 *மணி அளவில், மணமேல்குடி தி. மு. கழகச் சார்பில் ஜெயலட்சுமி தியேட்டரில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஏராளமான விவசாயப் பெருங்குடி மக்களும் ஏனையோரும் வந்திருந்தனர். கிளையின் செயலாளர் தோழர் இராமசுப்பையா தலைமை வகித்தார். தோழர் ஆர். எஸ். மணி இயக்கப் பண் பாடினர். அடுத்தபடியாக தோழர் மு. க. மீரா பேசியபின் துணைப் பொதுச்செயலாளர் என். வி நடராசன் அவர்கள் காங்கிரஸ் ஆட்சி சீர்கேட்டினையும் அதனை ஒழித்து நம் தாயகத்திற்குத் தனி உரிமை பெற கழகம் மேற்கொண்டுள்ள பணியினையும், விவசாயத் தொழிலாளர் பிரச்சினையில் கழகம் கொண்டுள்ள திட்டத்தையும் விளக்கிச் சொற்பொழிவாற்றினர். தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர் அருணாசலம் நன்றிகூற கூட்டம் இரவு* 10 *மணிக்கு முடிவுற்றது.*

மாலை 5-மணிக்கு ஊர்வலமும் நடைபெற்றது.

சென்னை :

3-வது வட்டம்

28—11—56 *இரவு* 7 *மணிக்கு, சென்னை—இராயபுரம் கே.வி.கே. சாமி நினைவு மன்றத்தில் தோழர் இளஞ்சேரன் தலைமையில், மன்றச் செயற்குழு உறுப்பினர் தேர்தல் நடைபெற்றது.*

4-வது வட்டம்

25—11—56 *காலை* 10 *மணி அளவில், சென்னை — வண்ணை சிமெட்ரிசாலை எண்* 14 *இல்லத்தில் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெற்ற கே. வி. கே. சாமி நினைவு மன்றத் துவக்க விழாவில் தோழர்கள் சா. கோ. நாராயணசாமி, ப புகழேந்தி, தோழியர் அலமேலு-அப்பாதுரை ஆகியோர் பேசினர்.*

44-வது வட்டம்

21—10—56 *காலை* 8 *மணியளவில் சென்னை—மயிலை குப்பம் பேட்டை வீரபெருமாள் வீதி, எண்* 17, *இல்லத்தில் கே. வி. கே. சாமி படிப்பகம் திறந்துவைக்கப் பட்டது.*

திருவொற்றியூர்:

23-11-56 *மாலை* $6\frac{1}{2}$ *மணிக்கு தோழர் எ. வி. ஆறுமுகம் தலைமையில் கே. வி. கே. சாமி நினைவு மன்ற நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது. செயலாளர்: கே. என். மணி; துணைச்செயலாளர்: என். எ. கிருட்டிணன்; பொருளாளர்: அப்துல்ரகீம். 5 செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.*

கோவை :

1—10—56*ல் கோவை 12-வது வட்ட தி. மு. கழகக் கிளையின் சார்பில் கே. வி. கே. சாமி படிப்பகம் திறக்கப்பட்டு, 14-10-56 காலை 11 மணிக்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: ஏ காளையா; துணைச்செயலாளர், பொறுப்பாளர்: வி. செயராசன்; பொருளாளர்: என். கிருஷ்ணசாமி. மற்றும் செயற்குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.*

புதுக்கோட்டை :

2—10—56*ல் புதுக்கோட்டை தெற்கு 2-ம் வீதியில் நடைபெற்றக் கழக உறுப்பினர் கூட்டத்தின் போது கே. வி. கே. சாமி நினைவுப் படிப்பகம் அமைக்கப்பட்டு, தோழர்கள் எஸ். வி. சுப்பையா, பி. அர்ச்சுனன் ஆகியோர் முறையே தலைவர், செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, விரைவில் படிப்பகத் துவக்க விழா நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.*

மன்னார்குடி :

3—10—56*ல் தோழர் கு. பாலகிருட்டிணன் தலைமையில் கே. வி. கே சாமி சொற்பயிற்சி மன்றம் துவக்கப்பட்டு, நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மன்றத்தின் அன்றைய நிகழ்ச்சியாக 'சாமியின் தொண்டு' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.*

பெண்கள் படிப்பக அனுதாபம்

சென்னை — இராயப்பேட்டை பெண்கள் படிப்பகத்தின் சார்பில் தோழர் கே. வி. கே. சாமி மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும், சென்னை மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' எனப் பெயரிடுமாறு சர்க்காரைக் கேட்டுக்கொண்டும், மகளிர் மன்ற அமைப்பை வரவேற்றும், தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு பணம் ஈட்டுவதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இராணுவ ஒப்பந்தங்கள்!

வேண்டுமென்பதற்கு பாக். பிரதமர் கூறும் காரணங்கள்

"பாகிஸ்தானின் பாதுகாப்பிற்கும் சுதந்திரத்திற்கும் இந்தியாவினால் ஆபத்து ஏற்படக்கூடும் என்ற சந்தேகம் துளியளவு இருக்கும்வரையில், பாகிஸ்தான் இராணுவ ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளும்" என்று பாகிஸ்தான் பிரதமர் சுராவர்த்தி கூறியிருக்கிறாராம்!

பாகிஸ்தானை அழிக்க!

"பாகிஸ்தான் பிரிவினையை ஒழித்து, பாகிஸ்தானை இந்தியாவுடன் இணைத்துக் கொள்கிற 'பெரிய இந்தியா' அமையவேண்டும் என்பதற்காகப் பாடுபடக்கூடிய நிலைமை இந்தியாவில் கிளம்புவதற்கு எல்லா வகையான சாத்தியக் கூறுகளும் இருக்கின்றன" என்றும் அவர் கூறினாராம்!

பாக்தாத் ஒப்பந்தம்

"பாக்தாத் ஒப்பந்தம் ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்டது—சமாதானத்திற்கு ஆபத்து விளைவிப்பது என்று நேரு கூறுவதற்குக் காரணம், அவரது 'நடுநிலைமை மண்டல'த்தில் பாகிஸ்தானும் வர வேண்டும் என்று விரும்புவதே. 'நடுநிலைமை மண்டலம்' என்பது, தென்கிழக்கு ஆசியாவில் நேருவின் தலைமையை நாமெல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதுதான்" என்றும் பாக். பிரதமர் கூறினாராம்!

ஆக்கிரமிப்பு

"நம்மைத் தாக்குவதற்குரிய சந்தர்ப்பங்கள் 5 சத விகிதமோ 2 சத விகிதமோ இருந்தாலும்கூட, நாம் நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்குத் தயாராக இருந்தாக வேண்டும்; அந்த சந்தர்ப்பமே இல்லாது ஒழியவேண்டும்" என்று அவர் கூறியிருக்கிறாராம்!

டிச. 12-ந் தேதி முதல்!

ஆக்கிரமித்த படைகள் படிப்படியாக வெளியேறுமாம்!

லண்டன், டிச. 1—

பிரிட்டனும் பிரான்சும் தமது படைகளை டிசம்பர் மாதம் 12-ந் தேதிமுதல் படிப்படியாக வாபஸ் பெற்றுக்கொள்ளும் என்றும் இவ்வாறே இரு நாடுகளும் அமெரிக்காவுக்கு உறுதியளித்துள்ளதாகவும் தெரிகிறது.

குற்றேவல் நாடுமீது ரஷ்யா ஆதிக்கம்

அங்கேரி பற்றி பண்டாரநாயகா கருத்து

ஒட்டாவா, நவ. 28 -

"ரஷ்யா, சர்வாதிகார ஆட்சி நடைபெற்று வரும் ஒரு நாடு குற்றேவல் புரியும் நாடுகள் எனக் கூறப்படும் மற்ற சிறிய நாடுகள்மீது ரஷ்யா ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இது, குடியேற்ற நாட்டுக் கொள்கையைப்போல் விரும்பத்தகாத ஒரு கொள்கையாகும் ரஷ்யாவின் ஆதிக்கத்தின் கீழ் இப்போதிருந்துவரும் குற்றேவல் புரியும் நாடுகள், தங்கள் தங்கள் எதிர்காலத்தைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்ளமுடியாத நிலையில் இருந்துவருகின்றன."

இவ்வாறு இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா, அண்மையில் கனடாவிற்குச் சென்றிருந்தபோது கூறியிருக்கிறார்.

கனடாவிற்குச் சென்றிருந்த அவரிடம் ஒட்டாவாவில் அங்குள்ள நிருபர் ஒருவர், 'அங்கேரியில் ரஷ்யா மேற்கொண்டிருக்கிற நடவடிக்கைகள் குடியேற்ற நாட்டு ஆதிக்கக் கொள்கையின் ஒருவகை என்பது உங்கள் கருத்தா?' என்று கேட்டபோதுதான், அவர் மேற்கண்டவாறு பதிலிறுத்திருக்கிறார்.

'மக்கள் விரும்பாத ஆட்சி நடைபெறுகிறது'

வியன்னு, டிச. 1—

புதிய அரசாங்கம் பழைய தவறுகளைச் செய்யாது என்று மக்கள் திருப்தியடையவேண்டும்! அரசாங்கத்தின் வாக்குறுதிகளைப் பலர் நம்பவில்லை என்பதை மறுக்க முடியாது; இந்த அவநம்பிக்கை நியாயமானதே; அதற்காக மக்கள் பொறுமையை இழந்துவிடக் கூடாது" என்று 'நெப் ஸாபாடாக்' என்ற கம்யூனிஸ்டு ஏடு ஹங்கேரியில் அமைந்துள்ள ரஷ்ய பொம்மை சர்க்காரிடம் மக்கள் அலட்சியம் காட்டுவதைச் சுட்டிக் காட்டி எழுதுகையில் குறிப்பிட்டுள்ளது.

ஐ. நா. தீர்மானம் உளுத்துப்போனதாம்!

பாக்தாத், டிச. 1—

'மத்தியக் கிழக்கிலிருந்து இஸ்ரேலை அடியோடு அழித்துவிடுவதே பாலஸ்தீன் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான, சிறந்த பரிகாரமாகும்,' என்று ஈராக் மன்னர் பைசல், பார்லிமெண்டின் புதிய கூட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் கூறியுள்ளார்.

பாலஸ்தீன் பிரச்சினைக்கு 1947-ல் ஐ. நா. நிறைவேற்றிய தீர்மானம் உளுத்துப்போனதென்றும், இதைத் தாங்கள் இனிமேல் ஒப்புக்கொள்ளப் போவதில்லையென்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தோனேஷியக் குடியரசுத் துணைத் தலைவர் இராஜினுமா

ஜகார்தா, டிச. 2—

இந்தோனேஷியக் குடியரசின் துணைத் தலைவர் டாக்டர் முகம்மது ஹட்டா கடந்த வெள்ளியன்று தனது பதவியிலிருந்து விலகிக் கொண்டிருக்கிறார் என்று தெரியவருகிறது.

இவர், டாக்டர் சுகர்ணோவுடன் சேர்ந்து நின்று இந்தோனேஷியாவின் சுதந்திரத்திற்காகப் போராடியவர்களில் ஒருவர்.

மந்திரிசபையில் பிளவு, நாட்டில் அமைதியின்மை, இராணுவத்தில் ஒற்றுமைக் குறைவு முதலிய நிலைகள் நிலவும் இந்த நேரத்தில் அவர் இராஜினுமாச் செய்திருக்கிறார்.

ஹட்டாவின் தலைமையில் புதியதொரு சர்க்கார் அமைய வேண்டும் என்று பல கட்சித் தலைவர்கள் வற்புறுத்தியிருக்கின்றனர் என்றும் அவர், குடியரசுத் தலைவர் சுகர்ணோ, மற்றும் இதர தலைவர்களுடன் கூடிப் பேசியபின்பே இராஜினுமாச் செய்திருக்கிறார் என்றும் தெரியவருகிறது.

விற்பனைக்குத் தயார்

1957 திராவிடர் நாட்குறிப்பு [டயரி]

தி. மு. கழக முழு விவரங்கள், 1,200 தி. மு. க. கிளைகளின் விவரங்கள், பேச்சாளர் முகவரிகள், அஞ்சலகச் செய்திகள், விற்பனைவரி, வருமானவரி, பதிவுக் கட்டணங்கள், பக்கத்துக்கு ஒன்று வீதம் அறிஞர்களின் 365 பொன்னுரைகள், இன்னும் பலவித குறிப்புகளும் விவரங்களும் அடங்கியது.

காலிகோ பைண்டு — உதய சூரியன் முகப்பு

ஒன்றின் விலை ரூ. 1. செலவு தனி

விற்பனையாளர் கழிவு 20 சதம். முன்பணத்துடன் ஆர்டர் உடனே அனுப்பவும்.

குறிப்பு :—ஏராளமான புதுவித பொங்கல் வாழ்த்துக்கள் தயாராகி உள்ளன. எங்கள் பகுத்தறிவுப் பாசறையில் தி. மு. க. அறிஞர்கள் எழுதிய எல்லாவிதமான புத்தகங்களும் இலக்கியங்களும், கதை-கட்டுரை-கவிதைகளும், திருமண பரிசுக்கும் பள்ளிகளின் லைப்ரரிகளுக்கும் தேவையான புத்தகங்களும் கிடைக்கும்.

'போர்வாள்' அலுவலகம்
128, பிராட்வே — சென்னை-1.

அமெரிக்கா தரும் உதவி

நடப்பு ஆண்டில் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு 16 கோடி டாலர் பொருளாதார உதவியளித்துள்ளதாம்.

கழகக் கூட்டம்

★

சி. மெய்யூர் :
5—12—56 மாலை 4 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தலைவர் : க. தேவன்
கொடியேற்றுபவர் :
டி. என். ஜி. அண்ணுமலை
பேசுவோர் :
என். வி. நடராசன்
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
ப. புகழேந்தி

சேலம் மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் சங்கக் கூட்டம்

5—12—56 பகல் 11 மணிக்கு, சேலம் மாவட்ட பஞ்சாயத்து ஆணையாளர் அலுவலகத்தில், சேலம் மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் சங்க நிர்வாகக் குழுக் கூட்டம் நடைபெறும். பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இந்தியப் பேரரசின் பணம் தேடும் படலம்

மேலும் ரூ. 16 கோடிக்கு புதிய வரிகள்!

புதுடில்லி, நவ. 30—

ஆண்டுக்கு ரூ 16 கோடி வருமானம் கிடைக்கும் புதிய வரிகளை விதிக்க இந்தியப் பேரரசு இரு மசோதாக்களை மக்கள் சபையில், நிறைவேற்றியுள்ளது. அடுவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இந்தப் புதிய முயற்சி செய்யப்படுகிறது.

1956 ஏப்ரல் முதல்தேதிக்குப் பிறகு மூலதனங்கள்மீது கிடைத்த இலாபத்திற்கு வரி விதிக்கப்படுகிறது.

6 சதவிகிதத்திற்குமேல் அளிக்கப்படும் 'டிவிடெண்டு'களுக்கு 'சூபர்' வரி விதிக்கப்படுகிறது.

முதலீடு அல்லாத கம்பெனிகளுக்கு 'சூபர்' வரி 4 அணுவிலிருந்து 6 அணுவாக உயர்த்தப்படுகிறது.

ஒபின், ஸ்பிரிட்டுகள்மீது சுங்க வரி 50 சதவிகிதமாக உயர்த்தப்படுகிறது. மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர்கள், இயந்திரங்கள், கெடியாரங்கள்மீதும் சுங்கவரி உயர்த்தப்படுகிறது.

செயற்கைப்பட்டு இறக்குமதி மீது பவுண்டுக்கு ரூ. 3 வீதமும், வரி உயர்த்தப்படுகிறது.

உண்டியல்கள்மீது ஒட்டப்படும் தபால் தலைகளின்மீது விதிக்கப்படும் வரி, ரூ 10-வரை உயர்த்தப்படுகிறது.

விலை அதிகமான கார்களுக்கு 3,000 இறக்குமதி வரி விதிக்கப்பட்டுள்ளது.

ரூ. 11 கோடி வருமான வரி தரவேண்டியவர்கள்

வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனராம்

இந்தியாவிலிருந்து வெளியேறிய நபர்களிடமிருந்து ரூ. 11 கோடி வருமான வரி வரவேண்டுமாம். இந்த வரியை வசூலிக்க இந்தியாவில் இவர்கள் சொத்து வைத்துச் செல்லவில்லையாம்!

இரத்தக் கொதிப்பு........

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவரான சுப்பிரமணியம் இது குறித்து தொடர்ந்து ஆராய்ச்சி நடைபெற்று வருவதாகவும், நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல வகை அவரை விதைகளும் வரவழைக்கப்பட்டு ஆராய்ச்சி நடைபெறுவதாகவும் கூறியிருக்கிறார்.

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்,

60, பிராட்வே — மண்ணடி — சென்னை - 1.

★

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் திருத்தமாக நேரில் கற்கலாம்

KNOWLEDGE IS POWER

சென்ற வருட நவம்பர் மாதம் ஆரம்பமாகிய இங்கிலீஷ் வகுப்புகள் இந்த வருட நவம்பரில் முடிவடைந்தன.

புதிய வகுப்புகள்

டிச. 10-ந் தேதி ஆரம்பமாகின்றன

வகுப்பில் சேர விண்ணப்பம் செய்துகொள்ள

கடைசி தேதி : 9-12-1956

இலக்கண ரீதியாக இங்கிலீஷில் பேசவும் சொந்தமாகக் கட்டுரைகள், கடிதங்கள் எழுதவும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். காலையிலோ மாலையிலோ வசதியான நேரத்தில் **வகுப்பிற்கு வந்து** ஒருமணி நேரம் படித்தால் போதுமானது.

முழு விவரங்களை நேரில் வந்து தெரிந்துகொள்க.

முக்கிய அறிவிப்பு: 16 வயதிற்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புகளில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் இங்கு நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.